முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் ஆசி நூல்**

**(விகாரி ஆடி மாதம் 19ம் திகதி முதல் ஆடி மாதம் 26ம் திகதி வரை**
**ஆகஸ்ட் 04ம் திகதி முதல் ஆகஸ்ட் 11ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **பலமான இயற்கையை கொண்ட பாரதமே**
**பாலதண்டாயுதன் அருள் மிகுந்த தமிழகமே**
**வளமுற இந்தியா தமிழகம் தன்னில்**
**விகாரி நள்ளி திங்கள் தன்னில்**

**2.** **தன்னிலே மூவாறோர் திகதி மேல் இருபானாற் திகதிவரை**
**(விகாரி வருடம் ஆடி மாதம் 19ம் நாள் 04.08.2019, ஞாயிறு முதல் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முடிய)**
**தக்க வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**அண்ணல் அரங்க ஞானி கேட்க**
**ஆசியாக மகான் அகத்தியனும் உரைப்பேன்**

**3.** **உரைக்கவே தமிழகம் தன்னில்**
**உழவுக்கும் கழனி பூமிக்கும்**
**தருகின்ற பாதுகாப்பு வழியே**
**தமிழகம் வளர்ச்சி நிலை காணும்**

**4.** **காணவே வருமுலகில் நீர்வளம்**
**காக்க கட்டாயம் புதிய அணைகளும்**
**ஞானவழி மக்களையும் கூட்டி**
**நடுவண் அரசு துணைபட கட்டிட**

**5.** **கட்டிட கழனியை கழனி புவியை**
**காத்த பெருமையுடன் தமிழ் மண்**
**கட்டம் காணா ஆபத்து நேரா**
**காக்கப்பட்டு ஏழ்மை வறுமை என்பது இல்லா**

**6.** **இல்லாது வாழ்வாதார காப்புடன்**
**எந்த உயிரும் இனி பலி காணா**
**நல்லவையாக மாற்றம் காணும்**
**நல்லாட்சியாகவும் நிலைகள் பெருகி**

7. பெருகியே பிற துறைகளும் கூட
பிழை நேரா மாற்றம் காணும்
தருமபலம் பெருக்கம் கண்டு
தமிழகம் இந்தியா தன் நிலை உயரும்

8. உயர்வான நிலைக்கு பலதுறையும்
உண்மைபட மாற்றம் பெறும்
தயவாக அண்டை தேசங்களும் துணை
தமிழகம் இந்தியா உயர வரும்

9. வருகவே கழனி பூமிக்கு சோரமிலா
வளர்ச்சிப் பணி கண்டு சிறக்க
முருகப் பெருமான் வழிபாட்டை
முனைந்து அரங்க ஞானி காட்டும்

10. காட்டும் துறையூர் மண்ணை நோக்கி
கழனி மக்கள் தன்னார்வமிக்க அன்பர்கள்
வாட்டமின்றி வந்து வழிபாடு செய்துவர
வருமுலகில் எல்லா பாதுகாப்பும் கண்டு சிறக்கும் வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் அகத்தியமகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் ஆடி மாதம் 19ம் நாள் 04.08.2019, ஞாயிறு முதல் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

இயற்கை பலம் மிகுதியாக கொண்ட பாரத தேசமே பாலதண்டாயுதன் முருகப்பெருமானின் அருள் மிகுந்து அருள்தேசமாக விளங்கும் தமிழகமே இந்தியாவிலும் தமிழகத்திலும் வளம்பெற விகாரி வருடம் ஆடி மாதம் 19ம் நாள் 04.08.2019, ஞாயிறு முதல் ஆடி மாதம் 26ம் நாள் 11.08.2019, ஞாயிறு முடிய உள்ள நடக்கவிருக்கும் எதிர்கால பலன்களை வார ஆசி நூலாக ஆறுமுக அரங்கமகா தேசிகருக்கு அகத்தியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்தியமகரிஷி.

ஞானபூமியாம் தமிழகத்தினில் உழவிற்கும் விவசாய நிலங்களுக்கும் தருகின்ற பாதுகாப்பின் மூலமாக தமிழகம் வளர்ச்சியினை காணுமப்பா. தமிழகத்தின் நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டுமாயின் வருங்காலங்களில் அவசியம் புதிய தடுப்பு அணைகளும் நீர் தேக்கங்களையும் தர்மவான்களையும் ஞானவான்களையும் மக்களையும் கூட்டாக ஒன்றிணைத்து மத்திய அரசின் துணையுடன் கட்டிட, தமிழகத்தின் நீர் ஆதாரம் பெருகி விவசாயத்தினையும் விவசாய நிலங்களையும் காத்திட்ட பெருமையுடன் தமிழகம் கஷ்டங்கள் ஏதும் நேராத தேசமாக ஆபத்துகள் ஏதும் வராத தேசமாக காக்கப்பட்டு தமிழகம் ஏழ்மையும் வறுமையும் இல்லாத வகையில் வாழ்வாதார காப்புடன் மக்கள் காக்கப்படுவார்கள். தமிழகத்தில் அரசு இவ்விதம் நீர் ஆதாரங்கள் மீது கவனம் செலுத்தி விவசாயிகளை பாதுகாத்திட்டால் தமிழகத்தில் இனி வருங்காலம் வறுமையாலும், பசியினாலும் எந்த உயிரும் பலியாகாமல் பாதுகாக்கப்பட்ட தேசமாக நல்தேசமாக மாற்றம் காணும்.

தமிழகத்தில் இந்தவிதமான அரசின் செயல்பாடுகளால் தமிழகத்தின் ஆட்சி நல்லாட்சியாக மலர்ந்து தமிழகத்தின் வளர்ச்சி நிலைகள் பெருகிடும், தமிழக அரசின் அனைத்து துறைகளும் மக்களின் மகிழ்ச்சியினால் தவறுகள் இல்லாத தர்மத்தின் வழி செல்லும் நல்துறைகளாக மாற்றம் அடையும். தமிழகத்தின் பொருளாதார நிலை மேன்மையடைந்து மக்களிடையே தர்மசிந்தனை அதிகமாகி தர்மம் பெருகும்.

தருமம் பெருகிட தமிழகமும் தமிழகத்தின் தாய் நாடாம் இந்திய தேசமும் நிலை உயர்வடையும். நாட்டினில் உள்ள பலவிதமான துறைகளும் உண்மையான வளர்ச்சியை அடைந்திடும். மேலும் இந்திய தேசத்தின் அண்டை தேசங்களும் தயவுடன் நடந்து இந்தியாவும் தமிழகமும் தன் நிலை உயர்வடையும்.

இந்திய தேசத்தினில் செய்யப்படுகின்ற வளர்ச்சி பணிகள் யாவும் விவசாய நிலங்களுக்கு பாதிப்பில்லாமல் சிறப்புடன் திட்டமிட்டு செய்யப்பட்டால் நன்மைகள் பெருகும். விவசாயத்திற்கு பாதிப்பில்லாமல் நன்மைகள் பெருகும். விவசாயத்திற்கு பாதிப்பில்லாமல் வளர்ச்சி பணிகளை செய்திட, மக்களெல்லாம் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்களும் ஞானமே வடிவாகிய முருகப்பெருமானின் வழிபாட்டை செய்திட வேண்டும்.

முருகப்பெருமான் வழிபாடே மக்களை உயர்த்தும் என மக்களுக்கு எடுத்துக் கூறி ஞானபூமியாக மாற்றி வருகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வாழும் துறையூர் நகரை நோக்கி விவசாயிகளும் தன்னார்வத்துடன் மக்கள் நலன் கருதி செயல்படும் தொண்டுள்ளம் கொண்டவர்களும் வந்து முருகப்பெருமானை வழிபாடுகள் செய்து வர, நாட்டு மக்கள் துன்பங்கள் ஏதும் இன்றி வாழ்வதோடு வருங்காலங்களில் நாட்டினில் உள்ள அனைத்து மக்களும் எல்லாவிதமான பாதுகாப்புகளையும் பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–